# தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பு

பதிவு எண் :158/CPT அங்கீகாரம் பெற்றது இணைப்பு:CITU&EEFI

எண் 27, மசூதி தெரு, சேப்பாக்கம், சென்னை 600 005.

**Telephone No : 044-28548529** **E-mail: coteecitu@gmail.com**
**Fax No : 044-28516574** **Web: www. cotee.org**


**சுற்றறிக்கை எண் 26/2016** **நாள் : 23/11/2016**

**பெறுநர்**

மாநில நிர்வாகிகள்
கிளைச் செயலாளர்கள்
மாநில செயற்குழு உறுப்பினர்கள்

அன்பான தோழரே,

வணக்கம்,

**மின் ஊழியர் மத்திய அமைப்பின் மாநில செயற்குழு கூட்டம்** சேலம் மாவட்டம் ஏற்காட்டில் 2016 நவம்பர் 19,20 தேதிகளில் மத்திய அமைப்பின் மாநிலத் தலைவர் தோழர் S.S. சுப்பிரமணியன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தலைவர் தனது உரையில் இன்றைய அரசியல் சூழல், தமிழக மின் வாரிய நிலைமை, உதய் திட்டத்தில் தமிழக அரசு சேர்ந்ததின் பின்னனி, களப்பிரிவு ஊழியர்களின் பதவி உயர்வு, அதில் உள்ள தேக்கம் நாம் போராட வேண்டிய அவசியம் பற்றி எடுத்துரைத்தார்.

செயற்குழுவை துவக்கி வைத்து, மத்திய அமைப்பின் துணைத் தலைவரும், CITU வின் உதவிப் பொதுச் செயலாளாருமான தோழர் R. கருமலையான் அவர்கள், சி.ஐ.டி.யு.வின் 13வது மாநில மாநாடு முடிவுகளையும், ஸ்தாபன பலம் அதிகரிக்க வேண்டிய அவசியத்தையும் CITU வின் அயனாவரம் பள்ளி நிதி சம்பந்தமாகவும் கூறினார்.

அடுத்து மத்திய அமைப்பின் பொதுச் செயலாளர் தோழர் S. இராஜேந்திரன் அவர்கள், 15வது மாநில மாநாடு திருவண்ணாமலையில் நடைபெற்ற விபரம் சம்பந்தமான பரிசீலனையை முன் வைத்தார். அதில் மாநாட்டு துவக்க நிகழ்ச்சி, விவாதம், கருத்தரங்கம் பேரணி பொதுக்கூட்டம், பிரச்சார பயணக்குழுக்கள் தொடர்பாகவும் முன் வைக்கப்பட்டது.

தூத்துக்குடியில் நடைபெற்ற CITU வின் 13வது மாநில மாநாட்டில் பிரதிநிதிகளின் பங்கேற்பு, தூத்துக்குடி அனல், விநியோக கிளைகளின் மாநாட்டிற்க்கான உதவி ஆகியவற்றையும், மாநாட்டிற்கு பின் நடைபெற்ற பணிகளான ஊதிய உயர்வு பேச்சு வார்த்தை, போனஸ் பேச்சு வார்த்தை, ஒப்பந்த ஊழியர் நிரந்தரம் - தூத்துக்குடி விபத்து, பகுதி நேர ஊழியர் நிரந்தரம், களப்பிரிவு, கணக்குப் பிரிவு ஊழியர்களின் தேங்கியுள்ள பிரச்சனை, குறித்தும் பொறியாளர் அமைப்பு, உழைக்கும் பெண்கள் ஒருங்கிணைப்பு குழு. ஒய்வு பெற்றோர் நல அமைப்பு, ஆகியவற்றில் கிளைகள் கவனம் செலுத்த வேண்டியதின் அவசியத்தையும், தனி நபர் பிரச்சினைகளில் மாநில மையம் தலையீடு செய்வது தீர்த்து வைப்பது போன்ற நடவடிக்கைகளை கிளைகள் முழுமையாக பயன்படுத்த வேண்டும் என்ற வேண்டுகோளையும் முன் வைத்தார்.

தற்போது, இளநிலை உதவியாளர் உள் முகதேர்வு தொடர்பான வழக்கு, கள உதவியாளர் சீனியாரிட்டி வழக்கு, DA - நிலுவை வழக்கு, PF வழக்கு சம்பந்தமாகவும் எடுத்துரைத்தார்.

நடைபெற்ற மண்டல குழக்கள் D.J. நினைவக கட்டிட விஸ்திரிப்பு பணிகள், குறித்தும், போனஸ் நன்கொடையில் டைரி, காலண்டர் ஆகியவற்றை கிளைகளுக்கு வழங்குவது குறித்தும் பேசினார். அடுத்து பொருளாதாரக் கோரிக்கைகளுக்காக போராடுகிறவர்கள் என்ற நிலையை மாற்றி, சமூக பணிகளில் ஈடுபடுகின்றவகளாக மாற வேண்டிய அவசியத்தை பற்றியும் கூறினார். கிளைப் பேரவைகளை நடத்தாத கிளைகள், உடனடியாக நடத்த வேண்டும். தணிக்கைகள் முடிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

இந்த பின்னனியில் பல்வேறு பணிகளை மாநில மையம் செய்த போதிலும், நமது ஸ்தாபன பலத்தை உயர்த்த பல கிளைகள் முயற்சி எடுக்கவில்லை! உறுப்பினர் எண்ணிக்கை 2016 நவம்பர் மாதம் நெருங்கிய பின்பும், 2015ம் ஆண்டு உறுப்பினர் எண்ணிக்கையை, 2016-ல் பல கிளைகள் எட்டவில்லை என்பதை கவலையோடு சுட்டிகாட்டப்பட்டது.

எண்ணூர் அனல் மின் நிலையத்தை தீடீரென நிறுத்தியதை கண்டித்தும், அங்குள்ள ஊழியர்களை புதிதாக துவங்கியுள்ள எண்ணூர் அனல் மின் நிலைய உற்பத்தி நிலையத்தில் சீனியரிட்டிகள் பாதிக்காத வகையில் மாறுதல் செய்யப்பட வேண்டும். இது தொடர்பாக தொழிற்சங்கத்தோடு பேசி, தீர்வுகாண வேண்டிய அவசியத்தையும், மின்வாரிய ஊழியர்கள், அதிகாரிகள், பொறியாளர்களுக்கு எதிர்வரும் மூன்று மாத சம்பளத்தை ரொக்கமாக வழங்கிட வேண்டும் என்ற கோரிக்கையை நாமும்,தொ.மு.சவும் வாரியத் தலைவர், தமிழக அரசின் நிதித்துறை செயலாளர், ஆகியோரை சந்தித்தை பற்றி கூறினார்.

தமிழ் மாநில CITU நடத்துகின்ற. அயனாவரம் பள்ளி தற்போது நிதி நெருக்கடியில் உள்ளது. பள்ளியின் தரத்தை உயர்த்துவதற்க்கும், கணினி உள்ளிட்ட பொருள்களை வாங்குவதற்க்கும், நிதி தேவைப்படுகிறது. கொடைக்கானலில் நடைபெற்ற CITU வின் மாநிலக்குழு கூட்டத்தில், CITU வுடன் இணைக்கப்பட்ட சங்கங்கள், சம்மேளனங்களின் மொத்த உறுப்பினர்களில் 10% பேரிடம் ரூ.500/ வசூல் செய்வது என முடிவு எடுக்கப்பட்டுள்ளது. அந்தப் பணியை மின்னரங்கத்தில் நாம் செய்ய வேண்டியுள்ளது. என்றும், அந்த பள்ளியில் தரத்தை உயர்த்த மின் ஊழியர்கள் அவர்களுடைய பங்கை செலுத்த வேண்டிய அவசியத்தை பற்றியும் கூறினார்.

டெல்லியில் தோழர் P. இராமமூர்த்தி நினைவாக கட்டிட திறப்பு விழா எதிர்வரும் 15.12.16 அன்று நடைபெறவுள்ளது. 2வது தளம் 800 ச.அடி, இந்திய மின்ஊழியர் கூட்டமைப்பு (EEFI) க்கும் சாலை போக்குவரத்து சம்மேளனத்திற்கும் ஒதுக்கப்பட்டு உள்ளது. அதற்கான நிதி தேவைப்படுகிறது. EEFI யின் அகில இந்திய மையம் நம்மிடம் நிதி கோரியுள்ளது. என்பதை பற்றி கூறினார்.

அடுத்து மாநிலப் பொருளாளர் தோழர் எம்.வெங்கடேசன், மத்திய அமைப்பின் வரவு செலவு கணக்கையும், மின் கதிர் கணக்கையும் முன் வைத்து பேசினர் தோழர் டி.சி. கமலக்கண்ணன் பொருளாளர் குடும்ப நல பாதுகாப்பு திட்டத்தின் வரவு செலவு கணக்கை முன் வைத்தார்

43 செயற்குழு உறுப்பினர்கள் விவாதத்தில் கலந்து கொண்டனர்.

தோழர்களின் விவாதத்திற்கு பின் கீழ்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன.

* களப்பிரிவு ஊழியர்களின் பதவி உயர்வில் உள்ள தேக்க நிலை! கணக்கீட்டு பிரிவு ஊழியர்களின் பதவி உயர்வில்காலதாமதம்! அனல்,புனல், மரபுசாரா எரிசக்தி போன்ற வட்டங்களில் ஏற்பட்டுள்ள காலியிடங்களை நிரப்பிடவும், பதவி உயர்வு வழங்கிடவும்,கணக்கீட்டு காலிப்பணியிடங்களில் ஒப்பந்தம் ஊழியரை அடையாளம் கண்டு நிரந்தரப்படுத்துவது, பகுதி நேர ஊழியர் நிரந்தரம், 1.12.2015 முதல் ஊதிய உயர்வு வழங்க கோரிக்கைகளை வலியுறுத்தி எதிர்வரும் **டிசம்பர் 22ம் தேதி மின் வாரிய தலைமை அலுவலகத்தை** ஒட்டு மொத்த கோரிக்கைகளின் மீது தீர்வு கண்டிட **'கூட்டு முறையீடும், காத்திருக்கும் போராட்டமும்'** நடத்துவதென முடிவு செய்யப்பட்டது.

இதற்காக, மண்டல குழக்கள் கிளைகள், நிர்வாகிகள் கூட்டம், கோட்ட மட்ட கூட்டம் ஆகியவற்றை கூட்டி விரிவாக பேசி, அதிகமான உறுப்பினர்களை சென்னைக்குழு திரட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கிளைகளுக்கான கலந்து கொள்ளும் தோழர்களின் எண்ணிக்கைக்கான கோட்டாவை கிளைகள் பூர்த்தி செய்ய வேண்டும். மாநில மையத்திலிருந்து 3000 போஸ்டர்களும் நோட்டீஸ் நகலும் கிளைகளுக்கு அனுப்பிவைக்கப்படும்.

* மஸ்தூர் பணிக்காலத்தை பதவி உயர்வுகளுக்கு எடுத்தக் கொள்ளக் கூடாது என்ற வாரிய உத்திரவை ரத்து செய்ய வைக்க நடவடிக்கை எடுப்பது, தேவைப்பட்டால் நீதி மன்றத்தை நாடுவது.

* மின் ஊழியர் மத்திய அமைப்பின் 2016 உறுப்பினர் எண்ணிக்கைய, 2015 உறுப்பினர் எண்ணிக்கையின் அடிப்படையில் வரும் டிசம்பர் மாதம் 31க்குள் முடிப்பது மாநில மையத்திலிருந்து கிளைகளுக்கு தணிக்கையாளர்களை நியமித்து. தணிக்கையாளர்கள் தங்கள் ஆய்வு செய்யும் கிளையில், கடைசியாக தணிக்கை செய்த ஆண்டுக்கு பிறகு வரும் அனைத்தும் ஆண்டுகளுக்கும் 2016 டிசம்பர் 31 வரை தணிக்கை செய்வது.

எனவே கிளைகள் வரவு செலவு கணக்குகளை தயாராக வைக்க வேண்டும். ஜனவரி மாத இறுதியில் தணிக்கைப்பணி துவங்கப்படும். மேலும் கிளைப்பேரவைகளை உடடினயாக நடத்த வேண்டும்.

- மாநில மையக் கணக்கை தணிக்கை செய்ய தோழர்கள் M. கிருஷ்ணகுமார் உடுமலை அறிவழகன் - மதுரை ஆகியோரை கொண்டு தணிக்கை செய்வது என முடிவு செய்யப்பட்டது.

- * **2017ம் ஆண்டு டைரி, காலாண்டர்களை** கிளைகள் கோரிய எண்ணிக்கை அடிப்படையில் டிசம்பர் 25க்குள் அனுப்பி வைப்பது.

* தனியார் மின் உற்பத்தி நிலைய ஊழியர்களை சந்திப்பது, அவர்களுக்கான கோரிக்கையை உருவாக்குவது , மாநாட்டிற்கு திட்டமிடுவது.

சி.ஐ.டி.யூ மாநிலக்குழு கோரியுள்ளவாறு அயனாவரம் பள்ளியை மேம்படுத்த நமது நிரந்தர உறுப்பினர்களின் எண்ணிக்கை அடிப்படையில் 10 சதவீதம் பேரிடம் நிதி வசூல் செய்வது.

இ.இ.எப்.ஐ. அகில இந்திய மையம் கோரியவாறு பி.ஆர். நினைவக கட்டிடத்திற்கு நிதி வழங்குவது.

தோழர்களே!

மேற்கண்ட முடிவுகளை அமலாக்க அனைத்து தோழர்களும் பாடுபட வேண்டும் என்ற வேண்டுகோளை மாநில மையத்தின் சார்பில் கேட்டுக்கொள்கிறோம்.

தோழமையுள்ள

**(எஸ்.இராஜேந்திரன்)**
பொதுச் செயலாளர்

## செய்திகள்

1. நவம்பர், டிசம்பர் ஜனவரி மாதங்களுக்கு சம்பளத்தை ரொக்கமாக வழங்க வேண்டும் என வலியுறுத்தி நாமும் இதர சங்களும் 24.11.2016 அன்று மாலை 5 மணி அளவில் வாரிய தலைமை அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடத்த உள்ளோம்.

2. எண்ணூர் அனல் மின் நிலைய உற்பத்தியை நிறுத்தி அனல் மின் நிலையத்தை மூடுவது தொடர்பாகவும் ஊழியர்கள் பொறியாளர்களின் நிலை குறித்தும் தொழிற்சங்கங்களோடு பேச 25.11.16 அன்று வாரியம் பேச்சு வார்த்தைக்கு அழைத்து உள்ளது.

3. இளநிலை உதவியாளர் தேர்வு தொடர்பான வழக்கு 28.11.2016க்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

4. கணக்கீட்டாளரிலிருந்து கணக்கீட்டு ஆய்வாளர் பதவிக்கு தகுதி காண் அறிக்கை கோரப்பட்டுள்ளது.

5. பதிவறை காப்பாளர் பதவியிலிருந்து பதிவறை எழுத்தர் பதவி உயர்வு வழங்க வாரியத்தை வற்புறுத்தி நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

## தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு(சிஐடியு)

2016 நவம்பர் 19,20 ஏற்காடு செயற்குழு கூட்ட முடிவுகள் கிளை தனிக்கையாளர்கள் விபரம்

| வ.எண். | கிளையின் பெயர் | தனிக்கையாளர்கள் |
|---|---|---|
| 1 | வடசென்னை | டி.பழனிவேல் |
| 2 | மேற்குசென்னை | கே.காங்கேயன் |
| 3 | மத்தியசென்னை | ஏ.பழனி |
| 4 | தென்சென்னை | டி. ஜெயசங்கர் |
| 5 | செங்கல்பட்டு | எம். சாலட் |
| 6 | காஞ்சிபுரம் | எம். தனலட்சுமி |
| 7 | வேலூர் | கே. அருள்செல்வன் |
| 8 | திருப்பத்தூர் | எம். தயாளன் |
| 9 | தர்மபுரி | ஆர்.ரவிக்குமார் |
| 10 | விழுப்புரம் | எம்.வெங்கடேசன் |
| 11 | கடலூர் | ஈ. அந்தோனி |
| 12 | திருவண்ணாமலை | கே.ரவிச்சந்திரன் |
| 13 | பெரம்பலூர்(தி.வடக்கு) | ஆர். சிவராஜ் |
| 14 | திருச்சி மாநகர் | எம்.கோவிந்தராஜ் |
| 15 | கரூர் | டி.கோபாலகிருஷ்ணன் |
| 16 | புதுக்கோட்டை | பி.கே.சிவக்குமார் |
| 17 | தஞ்சாவூர் | வி.இளங்கோ |
| 18 | நாகப்பட்டிணம் | டி. ஸ்ரீதர் |
| 19 | மதுரை | எஸ்.ரெங்கராஜன் |
| 20 | மதுரை மாநகர் | ஜி. ராமகிருஷ்ணன் |
| 21 | தேனி | எம்.பன்னீர்செல்வம் |
| 22 | ராமநாதபுரம் | எஸ். வண்ணமுத்து |
| 23 | சிவகங்கை | வை. பாலசுப்பிரமணியம் |
| 24 | திண்டுக்கல் | எம். பீர்முகமதுஷா |
| 25 | விருதுநகர் | எஸ். ஜெயசீலன் |
| 26 | திருநெல்வேலி | எஸ்.ராமசந்திரன் |
| 27 | தூத்துக்குடி | ஆர்.குருவேல் |
| 28 | கன்னியாகுமரி | எஸ். உமாநாத் |
| 29 | நீலகிரி | டி. ஜெய்சங்கர் |
| 30 | கோவை தெற்கு | எம். தனலட்சுமி |
| 31 | கோவை வடக்கு | எம். பன்னீர்செல்வம் |
| 32 | கோவை மாநகர் | கே. அருள்செல்வன் |
| 33 | உடுமலைப்பேட்டை | சி. ஜோதிமணி |
| 34 | சேலம் | கே. அம்பிகாபதி |
| 35 | மேட்டூர் | எஸ். அப்பாதுரை |
| 36 | ஈரோடு | வி.மதுசூதனன் |
| 37 | திருப்பூர் | எம். பீர்முகமதுஷா |
| 38 | கோபி | எஸ். இராஜேந்திரன் |
| 39 | வடசென்னை அனல் | எம். வெங்கடேசன் |
| 40 | எண்ணூர் அனல் | டி.ஸ்ரீதர் |
| 41 | மேட்டூர் அனல் | ஆர்.ரவிக்குமார் |
| 42 | தூத்துக்குடி அனல் | டி. பழனிவேல் |
| 43 | ஈரோடு நீர் மின் நிலையம் | ஆர்.சிவராஜ் |
| 44 | கடம்பாறை உற்பத்தி | பி.கே.சிவக்குமார் |
| 45 | குந்தா உற்பத்தி | டி. கோபாலகிருஷ்ணன் |
| 46 | நெல்லை உற்பத்தி | எஸ்.ராமசந்திரன் |
| 47 | காற்றலைபண்ணை | எஸ்.உமாநாத் |
| 48 | பொதுகட்டுமானம் சென்னை | ஆர்.சிவராஜ் |
| 49 | நாமக்கல் | ஏ.பழனி |
| 50 | பொறியாளர் அமைப்பு | எஸ்.இராஜேந்திரன் |
| 52 | கள்ளக்குறிச்சி | வி. இளங்கோ |
| 53 | மதுரை ஜி.சி.சி | எஸ்.ரங்கராஜ் |
| 54 | வள்ளூர் அனல் மின் நிலையம் | |
| 55 | கிருஷ்ணகிரி | கே.ரவிச்சந்திரன் |
| 56 | திருவாரூர் | கே.காங்கேயன் |
| | | |

## தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு(சிஐடியு)

22.12.2016 அன்று சென்னை காத்திருப்போர் போராட்டம் - பங்கேற்போர் எண்ணிக்கை

| வ.எண். | கிளையின் பெயர் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | வடசென்னை | 600 |
| 2 | மேற்குசென்னை | 800 |
| 3 | மத்தியசென்னை | 800 |
| 4 | தென்சென்னை | 800 |
| 5 | செங்கல்பட்டு | 400 |
| 6 | காஞ்சிபுரம் | 500 |
| 7 | வேலூர் | 200 |
| 8 | திருப்பத்தூர் | 300 |
| 9 | தர்மபுரி | 400 |
| 10 | விழுப்புரம் | 300 |
| 11 | கடலூர் | 400 |
| 12 | திருவண்ணாமலை | 500 |
| 13 | பெரம்பலூர்(தி.வடக்கு) | 200 |
| 14 | திருச்சி மாநகர் | 200 |
| 15 | கரூர் | 100 |
| 16 | புதுக்கோட்டை | 100 |
| 17 | தஞ்சாவூர் | 100 |
| 18 | நாகப்பட்டினம் | 150 |
| 19 | மதுரை | 200 |
| 20 | மதுரை மாநகர் | 100 |
| 21 | தேனி | 150 |
| 22 | ராமநாதபுரம் | 100 |
| 23 | சிவகங்கை | 150 |
| 24 | திண்டுக்கல் | 200 |
| 25 | விருதுநகர் | 100 |
| 26 | திருநெல்வேலி | 300 |
| 27 | தூத்துக்குடி | 300 |
| 28 | கன்னியாகுமரி | 200 |
| 29 | நீலகிரி | 100 |
| 30 | கோவை தெற்கு | 150 |
| 31 | கோவை வடக்கு | 150 |
| 32 | கோவை மாநகர் | 200 |
| 33 | உடுமலைப்பேட்டை | 150 |
| 34 | சேலம் | 150 |
| 35 | மேட்டூர் | 200 |
| 36 | ஈரோடு | 200 |
| 37 | திருப்பூர் | 150 |
| 38 | கோபி | 100 |
| 39 | வடசென்னை அனல் | 50 |
| 40 | எண்ணூர் அனல் | 50 |
| 41 | மேட்டூர் அனல் | 50 |
| 42 | தூத்துக்குடி அனல் | 50 |
| 43 | ஈரோடு நீர் மின் நிலையம் | 50 |
| 44 | காடம்பாறை உற்பத்தி | 30 |
| 45 | குந்தா உற்பத்தி | 30 |
| 46 | நெல்லை உற்பத்தி | 100 |
| 47 | மரபுச்சாரா எரிசக்தி | 30 |
| 48 | பொதுகட்டுமானம் சென்னை | 100 |
| 49 | நாமக்கல் | 100 |
| 52 | கள்ளக்குறிச்சி | 150 |
| 53 | மதுரை ஜி.சி.சி | 20 |
| 54 | வள்ளூர் அனல் மின் நிலையம் | 100 |
| 55 | தூத்துக்குடி தனியார் மின் நிலையம் | 20 |
| 56 | கிருஷ்ணகிரி | 150 |
| 57 | திருவாரூர் | 100 |
| | | 11380 |